**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - 2023-2024-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் திராவிடர் நலம் அவர்களின் அறிவிப்பு-தாட்கோ வாயிலாக செயல்படுத்தப்படும் சில திட்டங்களை ஒருங்கிணைத்து , 'முதலமைச்சரின் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் (CM ARISE - Chief Minister's Adi Dravidar and tRIbal Socio Economic Development Scheme)' என்ற பெயரில் திருத்தி அமைத்தல் - 2023-2024 -ஆம் நிதியாண்டிற்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு - வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை**

**அரசாணை (நிலை) எண். 167** **நாள்: 07.12.2023**

**சோபகிருது வருடம்**
**கார்த்திகை 21-ஆம் நாள்**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கப்பட்டது.**

1 அரசாணை (நிலை) எண்.120, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி) துறை, நாள் 23.11.2011.

2. அரசாணை (நிலை) எண்.64, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிபா) துறை, நாள் 26.3.2021.

3 மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-18அவர்களின் கடித ந.க.எண். ஜி1/1730/2021, நாள் 06.07.2023.

........

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத்தொடரில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளையோரின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட உதவிடும் பொருட்டு தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்படும்".

த.பி.பா.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஒன்றிய அரசின் நிதியுதவியின்கீழ் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து தனிநபர் பயன்பெறும் கடன் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியில், 2011 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காடு அல்லது ரூ.2,25,000/- இவற்றில் எது குறைவானதோ அத்தொகையை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பழங்குடியினருக்கு திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.3,75,000/- இவற்றில் எது குறைவானதோ அத்தொகையை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில் மாண்புமிகு அமைச்சரின் அறிவிப்பை செயல்படுத்துவது தொடர்பாக தாட்கோ வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் திருத்தி அமைப்பது குறித்து கருத்துரு பெறப்பட்டுள்ளது.

5. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

I. தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பொருளதார மேம்பாட்டு திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் (மருத்துவம்), நிலம் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து, **'முதலமைச்சரின் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம்** (CM ARISE - Chief Minister Adi Dravidar and tRIbal Socio Economic Development Scheme)' என **பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. இத்திட்டம் செவ்வனே நடைபெற உரிய வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுவதற்கு தகுந்த கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.**

II. இந்த புதிய திட்டத்தின் நோக்கம் அடுக்கு II மற்றும் அடுக்கு III நகர்ப்புற பகுதிகளுக்கு தொழில்முனைவோரை உருவாக்குவதாகும். விவசாயம் மற்றும் சிறு, குறு தொழில் மையப்படுத்தி இத்திட்டமானது ஒரு வலைப் பின்னலில் இணைக்கப்பட்டு உரிமையாளருக்கு தகுந்த பயிற்சி அளித்து தொழிலை தொடங்குவதற்கு உதவ வேண்டும்.

III. இந்தப் புதிய திட்டத்தை ' District Livelihood Credit Management Agency ' என்ற முகமை மூலம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

...3

IV. ஆதிதிராவிடர்களுக்கான தனி நபர் திட்டத் தொகையில் முன்விடுப்பு மானியமாக விடுவிக்கப்படும் தொகை 30% லிருந்து 35% ஆக உயர்த்தி திட்ட மதிப்பீட்டில் 35 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகையை கடன் வழங்கும் வங்கிக்கு வழங்கப்படும். பயனாளிகளின் பங்குத் தொகையாக 5%-ம் மீதத் தொகையை வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.

V. 6% வட்டி மானியத்தினை அரையாண்டிற்கு ஒரு முறை சம்மந்தப்பட்ட வங்கிகளிடமிருந்து பெற்று, ஒத்திவைப்பு காலம் உட்பட முழுவதுமாக திரும்ப செலுத்தும் காலம் வரை, வட்டி மானியம் பெறுவதற்காக தகுதிகள் அடிப்படையில் வழங்கலாம்.

VI. 2023-2024ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை ரூ.40.00 கோடி நிதி செலவில் செயல்படுத்தப்படும். அதில்:-

(i) 25% நிதி செலவினம் ரூ.10.00 கோடி மட்டும் TAHDCO தனது சொந்த நிதியிலிருந்து பயன்படுத்த அனுமதி வழங்கப்படுகிறது.

(ii) மீதமுள்ள தொகை ரூ.29.75 கோடி மட்டும் மாநில அரசு நிதியிலிருந்து பெற்று வழங்க நிருவாக அனுமதி வழங்கப்படுகிறது.

(iii) அதில், 2023-2024ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் இன மக்கள் பயன்பெறும் வகையில் இந்த புதிய திட்டத்தை செயல்படுத்த ரூ.10.00 கோடி மட்டும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

VII. இந்த புதிய திட்டத்தில் ஆதரிக்கப்படும் செயல்பாடுகள், தற்போதைய திட்டத்தில் ஆதரிக்கப்படும் செயல்பாடுகளிலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும் என மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலே பத்தி 5 (VI) (iii)இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 01 ஆதிதிராவிடர் நலன் - 102 பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – AH முதலமைச்சரின் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம் - 309 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை.

(IFHRMS DPC : 2225 01102 AH 30903).

...4

7. மேலே பத்தி 5 (VI) (iii) இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ-I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத்தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-இல் உள்ள அட்டவணை 'A' படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி(வ.செ.பொ-I) துறைக்கு நேரடியாக அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(வ.செ.பொ-I/ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8.மேலே பத்தி 6-இல் தோற்றுவிக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பினைத் தங்களது பதிவேடுகளில் துவக்கிக்கொள்ளுமாறு தொடர்புடைய சம்பளக்கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 5 (VI) (iii)இல் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் IFHRMS-இல் காசோலை /வரைவோலை மூலம எதிர்வரவு வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

K வைப்புத் தொகைகள் மற்றும் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443 00-உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் -BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவளர்ச்சி கழக வைப்புத் தொகைள் தாட்கோவின் வைப்புத் தொகைகள் "801 – வரவுகள் 02- வட்டி பெறாதவை -802 –வழங்குதல் – 02- வட்டி பெறாதவை.

**(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 801 02) (Receipt)**

**(IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 802 02) (Outgo)**

10. மேலே பத்தி 5 (VI) (iii)-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்துவதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

...5

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். e-922/சிஉதி/2023/ நிதி(ஆதி(ம)பந)/2023, நாள் 06.12.2023-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.1434 (ஆயிரத்து நானூற்று முப்பத்து நான்கு).

(IFHRMS ASL No.2023/21424).

//ஆளுநரின் ஆணைப்படி//

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை, இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை- 600 005.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
அனைத்து மாவட்ட மேலாளர்கள் , தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 600 018/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை - 600 005/8/9.
மாவட்ட திட்ட அலுவலர், ( பழங்குடியினர் நலம்)
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை -600 009.

நகல் :-
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை-600 009.
நிதி (ஆதி (ம )பந) த்துறை , சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு -1 / ஆதிந -5 / ப.மே 1) த்துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்